சுருக்கம்

நிலம் – வீட்டுமனை வழங்குதல் ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி மொத்த செலவில் 2 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல் – சிறப்பு திட்டம் அங்கீகரித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வருவாய்(நிமு.1(2)துறை

அரசாணை(நிலை) எண்.534 நாள்: 15.9.2005.

படிக்கவும்

2005–2006 , ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கை பத்தி 68

ஆணை:-

தமிழக சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட 2005–2006ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் 50 கோடி ரூபாய் மொத்த செலவில் ஊரகப் பகுதிகளில் வாழும் 2 இலட்சம் ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் புதிய திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், வீட்டு மனைகள் தேவைப்படும் ஊரக ஏழை மக்கள் கண்டறியப்பட்டு, தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு தக்க வீட்டுமனைகள் வழங்கப்படும். புதிய குடியிருப்புகளுக்கு முறையான துப்புரவு வசதிகளுடன், தேவையான கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இத்திட்டம், ஊரக மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இந்தப் புதிய பெருந் திட்டத்தின் கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும். உள்ளூரில் நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டுமனைகள் வழங்குவது குறித்து முடிவுகள் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

2. மேற்படி சிறப்புத் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்படும்:-

(i) இத்திட்டம் ஊரகப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கானதால் அவர்கள் வசிக்கும் ஊராட்சிகள், சிறப்பு ஊராட்சிகளின் பகுதிகளில் செயல்படுத்தப்படும்;

(ii) தற்போது சென்னை நகரிலிருந்து முப்பத்திரண்டு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் அரசு நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றி பட்டா வழங்குவதற்கு உள்ள தடையாணை தொடர்ந்து நீடிக்கும்;

(iii) மாவட்டத் தலைநகரங்களிலிருந்து பதினாறு கிலோ மீட்டருக்குள் பட்டா வழங்குவதற்கு தற்போதுள்ள தடையாணையை தளர்த்தி, எட்டு கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஊராட்சிகள் மற்றும் சிறப்பு ஊராட்சிப் பகுதிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்; மற்றும்

Verified by RealEstate ™

(iv) நீலகிரி மாவட்டத்தில் அரசு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடையாணையுள்ளது. இருப்பினும், நீலகிரி மாவட்டத்தின் ஊராட்சி மற்றும் சிறப்பு ஊராட்சிகளில் வீடற்றோருக்கு வீட்டு மனை வழங்குவதற்கு ஏற்ற, நிலச்சரிவிற்கு உட்படாத தனியார் நிலங்கள் கிடைக்கும் பட்சத்தில், மனைப்பட்டா வழங்குவதற்கான முன் மொழிவுகளை நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் உரிய வழிமுறையாக அரசிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2.2 வருமான வரம்பு

(v) இத்திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பெறுவோரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.16,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். வருவாய்த் துறையினரால் ஆண்டு வருமானம் ரூ.16,000/- க்கும் மேல் என கணக்கிடப்பட்டு, ஆனால் ஊரக வளர்ச்சித் துறையின் வறுமை கோட்டிற்கும் கீழ் வாழ்வோரின் பட்டியலில் இடம் பெற்றுள்ள வீடற்ற குடும்பங்களையும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுடையவர்களாகக் கருதலாம்.

3. மேலே பத்தி 2ல் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இத்திட்டம் புதிய குடியிருப்புகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஏதுவாக ஊரக மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் அரசின் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து தனியே வெளியிடப்படும்.

4. தமிழ்நாட்டில் ஊராட்சி மற்றும் சிறப்பு ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற ஏழைகள் அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட வேண்டும். மாவட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்ட நிதி அம்மாவட்டத்திலுள்ள வீடற்ற ஏழைகளனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்க போதவில்லையென்றால், அவர்களுக்கு வீட்டுமனை வழங்குவதில், தற்போது வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்குவதிலே உள்ள கீழ்க்கண்ட முன்னுரிமைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்:-

(அ) (i) எல்லைப்புற பாதுகாப்புப்படை மற்றும் இராணுவப்படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது உடல் ஊனமுற்றோர் குடும்பங்கள்;

(ii) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்;
(iii) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்;
(iv) முன்னாள் இராணுவத்தினர்; மற்றும்
(v) நிலமற்ற ஏழை.

முன்னுரிமைகளை முடிவு செய்யும்பொழுது, ஒரு சில ஊராட்சிகள், சிறப்பு ஊராட்சிகள் மட்டுமின்றி பரவலாக மாவட்டத்தின் அனைத்து ஊராட்சி/சிறப்பு ஊராட்சிகளிலுள்ளவர்களும் பயன்படும்படி பயனாளிகளைத் தேர்வு செய்ய வேண்டும்;

(ஆ) மிக ஆட்சேபரமான புறம்போக்கில் அதாவது நீர் நிலை புறம்போக்கு, மேய்ச்சல் தரை, மந்தைவெளி, களம் மற்றும் மயானம் ஆகிய

Verified by RealEstate™

புறம்போக்குகளில் குடியிருக்கும் மக்களுக்கு அந்த இடத்திலேயே வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாத நிலையுள்ளதால் அவர்களில் தகுதியானவர்களுக்கு வேறு வகையான புறம்போக்கு நிலங்களிலோ அல்லது நில எடுப்பு செய்யப்படுகின்ற பகுதிகளிலோ வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும்; இதுபோன்ற இனங்களைக் கண்டறியும்போது வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியுடையவர்களாக இருக்கும் இனங்களை மட்டும் தெரிவு செய்ய வேண்டும்;

(இ) ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளில் வீடு கட்டி வாழும் ஏழை குடும்பங்களுக்கு, அதே இடத்தில் தலா மூன்று சென்ட்டுக்கு மிகாமல் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட வேண்டும்;

(ஈ) தங்களது சொந்த வீடுகளில் இல்லாமல் பிறரது வீடுகளில் தற்காலிகமாகக் குடியிருப்பவர் களுக்கும், வீடற்ற ஏழை குடும்பத்தினருக்கும் தகுதியான புறம்போக்கு நிலங்களிலோ அல்லது தனியார் நிலத்தைக் கையகப்படுத்தியோ வீட்டுமனைப்பட்டா வழங்கலாம்; மற்றும்

(உ) நிதிநிலை இடம் கொடுத்தால் கூட்டு குடும்பத்தில் வசிக்கின்ற ஏழை தம்பதியர் தங்களுக்கென்று தனியாக வீட்டுமனை கேட்டு, விண்ணப்பித்தால் அவர்களுக்கும் இலவச வீட்டுமனை பட்டா வழங்கலாம்.

5. மேலே பத்தி 4ல் தெரிவிக்கப்பட்டபடி நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்க ஏதுவாக பயனாளிகள் பட்டியல் தயாரிக்க கீழ்க்கண்டுள்ளவாறு வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்:-

(i) வட்டாட்சியர்கள்/துணை வட்டாட்சியர்கள் ஒவ்வொரு ஊரிலும், முன்னறிவிப்பு கொடுத்த பின், பொதுவான பள்ளிக்கூடம் அல்லது ஊராட்சி கட்டிடங்களில், ஊராட்சித் தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் முன்னிலையில் விண்ணப்பங்களை வாங்க வேண்டும். விண்ணப்பம் அளித்தவர்களுக்கு வேறு வீடு உள்ளதா என்பது பற்றியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் ஏற்கனவே வீடு பெற்றுள்ளார்களா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். நிலமற்ற விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்த பின், துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர் பயனாளிகள் தேர்வுப் பட்டியலை மீண்டும் முழுமையாக சரிபார்க்க வேண்டும்;

(ii) மேற்படி முறையில் வருவாய்த்துறை அலுவலர்களால் தயாரிக்கப்படும் பட்டியல் ஊரக வளர்ச்சித் துறையால் பராமரிக்கப்படும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் தொடர்பான விவரப் பட்டியலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட வேண்டும். ஒரு குடும்பத்தினரின் பெயர், வருவாய்த்துறையால் தயாரிக்கப்பட்டுள்ள பயனாளிகள் பட்டியலில் இடம் பெறாமல், ஊரக வளர்ச்சித் துறையின் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால், அத்தகைய குடும்பத்தினருக்கு வீடோ அல்லது வீட்டுமனைப் பட்டாவோ உள்ளதா என்பதை சரிபார்த்து, அவர்களுக்கு வீடோ அல்லது வீட்டுமனையோ இல்லையென்றால் அவர்களைப் பயனாளிகளின் பட்டியலில் சேர்க்கலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பட்டியலை கிராம சபையில் வைத்து கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

Verified RealEstate ™

6. இந்நோ்வுக்கு தேவையான நிலத்தின் அளவை நிர்ணயம் செய்தல், வழங்குதல் முதலியவற்றிற்கு கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:–

(i) தற்போது ஊரகப் பகுதிகளில் 3 சென்ட் அளவிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழும் தலா 3 சென்ட் வழங்கலாம்;

(ii) தற்போது இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே கிராமங்களில் வீட்டு மனையற்றவர்களுக்கு மட்டும் வீட்டுமனைப்பட்டா வழங்குவதாலும், அக்கிராமங்களில் பள்ளிக்கூடம், சத்துணவுக் கூடம் போன்ற பொது கட்டடங்கள் ஏற்கனவே இருக்குமென்பதாலும், பொது உபயோகம் மற்றும் சாலை அமைப்பதற்கென தேவையான நிலத்தின் அளவு மொத்த மனைகளின் பரப்பளவில் 20 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்படுகிறது;

(iii) வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்குமுன்னர், சாலை வசதிகள், பொது வசதிகளுக்காக இடம் ஒதுக்கி உரிய மனை வரைபடம் (Lay Out) தயார் செய்யப்பட வேண்டும்;

iv) ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஒரு குடும்பத்திற்கு 3 சென்ட்டுக்கு மிகாமல் வழங்கி அந்த ஆக்கிரமணத்தை முறைப்படுத்தல் வேண்டும்;

(v) ஆட்சேபகரமற்ற புறம்போக்குளை கிராம நத்தமாக வகை மாற்றம் செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்படுகிறது. அவர்களுக்கு இத்தகைய இனங்களில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி வரம்பான ரூபாய் இரண்டு இலட்சம் என்ற உச்சவரம்பு இச்சிறப்பு திட்டம் செயலாக்க வரம்புக்காக மட்டும் நீக்கம் செய்யப்படுகிறது;

(vi) ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் வரும் சமத்துவபுரம் திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படாமல் உள்ள காலி நிலங்கள் மற்றும் போலிப் பட்டாக்களை நீக்குவதால் கிடைக்கும் நிலங்களையும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் ஒப்பதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரை படத்தில் பயனாளிகள் பெயரில் வழங்கப்பட்ட போலிப் பட்டாக்களை நீக்குவதால் கிடைக்கும் நிலங்களையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடுகட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களில் வீடுகள் கட்டப்படாமல் உள்ள காலி நிலங்களையும் இத்திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளலாம், எந்த இனத்தைச் சார்ந்த மக்களுக்கான ஒதுக்கீடு காலியாக உள்ளதோ அந்த இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் தான் அந்த காலிமனைகளை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் கையகப்படுத்திய நிலத்தை ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் கையகப்படுத்திய நிலத்தில் கிடைக்கும் மனைப்பிரிவை அந்த பிரிவினை சார்ந்தவர்களுக்கே வழங்கப்பட வேண்டும்;

Verified RedEfile TM

(vi) போதிய அளவிற்கு தகுதியான புறம்போக்கு நிலங்கள் இல்லாத பட்சத்தில் தனியார் நிலங்களை 1894 ஆம் ஆண்டைய நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது;

(vii) அரசாணை (நிலை) எண்.885, வருவாய்த்துறை, நாள் 21.9.95இல் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில் தனியார் நிலங்களை மாவட்டக் குழுவின் மூலம் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் வாங்க அனுமதி வழங்கப்படுகிறது; மற்றும்

(ix) ஊருக்கு அருகில், சாலைக்கு அருகில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஏதுவான பகுதியாக இருப்பதை உறுதி செய்து, தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்த நில உரிமையாளர்களிடம் ஒப்புதல் வாங்க வேண்டும்;

7. வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் இந்நேர்வுகளில் தற்போதுள்ள நடைமுறைகளை ஒட்டி குடும்பத் தலைவிகளின் பெயரிலேயே பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும்.

8. மேற்சொன்ன நிபந்தனைகளுடன் ஊராட்சிப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்குவதற்கு ஏதுவாக 2005–2006ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50 கோடியில் ரூ.31 கோடி கீழ்க்குறிப்பிட்டுள்ளபடி மாவட்டங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது.

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
1	காஞ்சிபுரம்	2.00
2	திருவள்ளூர்	2.00
3	ஈரோடு	2.00
4	திருச்சி	2.00
5	மதுரை	2.00
6	தஞ்சாவூர்	2.00
7	நாமக்கல்	1.50
8	திருநெல்வேலி	1.50
9	தூத்துக்குடி	1.50
10	கடலூர்	1.50
11	கன்னியாகுமரி	1.50
12	கோயம்புத்தூர்	1.50
13	வேலூர்	1.00
14	விழுப்புரம்	1.00
15	நீலகிரி	1.00
16	தருமபுரி	0.75
17	கிருஷ்ணகிரி	0.75
18	நாகப்பட்டினம்	0.75
19	திருவாரூர்	0.75
20	திருவண்ணாமலை	0.50

Verified RedEstate ™

21	கரூர்	0.50
22	பெரம்பலூர்	0.50
23	தேனி	0.50
24	திண்டுக்கல்	0.50
25	சிவகங்கை	0.50
26	சேலம்	0.25
27	புதுக்கோட்டை	0.25
28	இராமநாதபுரம்	0.25
29	விருதுநகர்	0.25
	மொத்தம்	31.00

9. மேலே பத்தி 8ல் தெரிவிக்கப்பட்ட ரூ.50 கோடி ஒதுக்கீடு மானியக் கோரிக்கை எண்.39, வருவாய்த்துறை, வருவாய் நிருவாக ஆணையரகத்தின் 39–02 கீழ் அமைந்துள்ளது. இந்த ஒதுக்கீடு நில நிருவாக ஆணையரகத்தின் 39–06 கீழ் மாற்றப்படுகிறது. அதன்படி சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு இந்த செலவினத்தை மேற்கொள்ள அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது. இந்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2216 – வீட்டு வசதி. 03 ஊரக வீட்டு வசதி – 102 நிலமற்றவர்களுக்கு வீட்டுமனை வழங்குதல் பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் JE ஏழைகளுக்கு வீட்டுமனை 64 நிலங்கள்.
(த.தொ.கு.2216 03 102 JE 6406)

10. மேற்படி ஒதுக்கீடான ரூ.50 கோடி தொகையை, மானியக் கோரிக்கை எண்.39, வருவாய்த்துறை – வருவாய் நிருவாக ஆணையரகத்திலிருந்து (39–02) நீக்கம் செய்யவும், அத் தொகையை நில நிருவாக ஆணையரகத்தின் (39–06) கீழ் கொண்டு வருவதற்குமான உரிய செயற்குறிப்புகளை அரசின் நிதித்துறைக்கு 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு இறுதி திருத்த மதிப்பீட்டிற்கு கருத்துரு அனுப்புகையில் அனுப்பி வைக்குமாறு, முறையே சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு நில நிர்வாக ஆணையர் மேலே கூறப்பட்ட கணக்குத் தலைப்பிற்கு கணக்கு நேர் அமைப்பு மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடு அதிகாரி ஆவார்.

11. மேலே பத்தி 8 இல் ஒப்பளிக்கப்பட்ட ரு.31 கோடியை (ரூபாய் முப்பத்தி ஒன்று கோடி மட்டும்) மாவட்டங்களுக்கு உடன் விடுவித்து இரண்டு மாதங்களில் இச்சிறப்புத் திட்டப் பணிகளை ஆய்வு செய்து பணியில் ஏற்படுகின்ற முன்னேற்றத்திற்கு ஏற்ப கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக தகுந்த கூடுதல் அறிவுரைகளை வழங்கிடுமாறும், திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்து அரசிற்கு வாரம் ஒரு முறை முன்னேற்ற அறிக்கையை அனுப்பி வைக்கும்படியும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

Verified Real Estate ™

13

12. இந்த ஆணை ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நிதித்துறையின் ஒத்திசைவுகளுடன் முறையே அ.சா.எண்கள்.37448/தி4/2005–1, நாள் 5.9.2005 மற்றும் 231/து.செ.(பி)/2005, நாள் 12.9.2005–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சக்திகாந்த தாஸ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை –5.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்/ அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்.
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை – 9.
இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை – 15.
சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவைத்துறை, சென்னை–5.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 9.
இயக்குநர், நகர ஊரமைப்பு துறை, சென்னை – 2.
வருவாய்த்(நி.மு.2,3,4,5,6,மற்றும் வ.நி.3)துறை, சென்னை – 9.
நிதி (வருவாய்)/ (வரவு செலவு பொது–2), (வரவு செலவு தொகுப்பு) சென்னை – 9.
சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு) சென்னை –5.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.(பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், (தணிக்கை–1)சென்னை–18.(பெயரிட்ட உறையில்),
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதித்துறை, அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
இ.கோ/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

Verified by RealEstate ™